# SUBORDINATE COURT, PADMANABHAPURAM
# CASE NO.SC.246/2017
# Deposition of P.W.2

Name : ஜெயக்குமார்
S/o, D/o, W/o :
Caste :
Religion :
Village :
Taluk :
Calling :
Age :
Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of
**Dated:28.06.2023**
**(A1, 3, 4, 5, 6 are Present. A2, A7 are absent and their side 317 Crpc petition filed and allowed.)**
**<u>முதல் விசாரணை</u>-**

நான் முன்பு முட்டைக்காடு, பாரதியார் சாலையில், எனது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் வசித்து வந்தேன். தற்போது நாகர்கோவில், பார்வதிபுரத்தில் எனது மனைவி பிள்ளைகளுடன் வசித்து வருகிறேன். நான் J.K. Construction and builders என்ற பெயரில் வீடு கட்டி விற்பனை செய்யும் தொழில் செய்து வருகிறேன். இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ள 1, 3, 4, 5, 6 எதிரிகளையும், நீதிமன்றத்தில் இன்று ஆஜராகாத 2, 7 எதிரிகளையும் எனக்குத் தெரியும். எனது மனைவி பெயர் சுனிதா. 31.07.2011 அன்று காலை முட்டைக்காட்டில் உள்ள பி.எம்.எஸ் என்ற டீ கடைக்கு காலை 07.45 மணிக்கு டீ அருந்துவதற்காக சென்றேன். அப்போது எனது மனைவியும், பிள்ளைகளும் சர்ச்-க்கு செல்வதற்காக என்னிடம் வீட்டின் சாவியை கொடுப்பதற்காக வந்தார்கள். அப்போது எதிரிகள் ஆல்பர்ட் என்ற வெடிக்குண்டு ஆல்பர்ட், ஜான் மெக்கடியார் மற்றும் இவ்வழக்கின் பிற எதிரிகளும் KL. 2673 என்ற பதிவு எண் கொண்ட வெள்ளை நிற அம்பாசிடர் காரில் வந்து நான் அணிந்திருந்த உடைகளை அகற்றி அரை நிர்வாணமாக்கி என்னை அடித்து, இழுத்து கத்தியை வைத்து மிரட்டி அவர்கள் வந்திருந்த காரில் என்னை ஏற்றினார்கள். பின்னர் என்னை எதிரி ஜான்மெக்கடியாருக்குரிய அழகியமண்டபத்தில் உள்ள பெயின்ட் குடோனுக்கு கொண்டு வந்தார்கள். அங்கு வைத்து எதிரி வெடிக்குண்டு ஆல்பர்ட்,

ஜான் மெக்கடியார் மற்றும் பிற எதிரிகளும் என்னை அடித்தார்கள். எதிரி ஆல்பர்ட் எனது கழுத்தில் கத்தியை வைத்து எழுதப்படாத பத்திரத்தில் கையொப்பம் இடுமாறு கூறினார். எனது மனைவி கொடுத்த புகாரின் அடிப்படையில் கொற்றிக்கோடு காவல்துறையினர் மேற்படி இடத்திற்கு வந்து என்னை மீட்டார்கள். பின்பு போலிசார் என்னை கொற்றிக்கோடு காவல்நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். இன்று நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் வெள்ளை நிறத்தில் கறுப்பு கரையும் கட்டம் போட்ட சாரம் ஒன்று. போலிசார் என்னிடமிருந்து கைப்பற்றினார்கள். சாட்சி தற்போது மேற்படி டீ கடையில் வைத்து எதிரிகள் என்னை காரில் தூக்கி போடும் போது எதிரிகள் பிடுங்கி எடுத்த எனது சாரத்தை போலிசார் சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றியதாகவும் அந்த சாரம் தான் மேற்படி சாரம் என்று கூறுகிறார். மேற்படி சாரம் அரசு தரப்பு சா.பொ.1, இவ்வழக்கு சம்மந்தமாக என்னை போலிசார் விசாரணை செய்தார்கள்.

**3 முதல் 7 எதிரிகள் தரப்பில்குறுக்கு விசாரணை**

3 முதல் 7 எதிரிகள் தரப்பில் சாட்சியிடம் குறுக்கு விசாரணை இல்லை என்று கூறப்பட்டது.

**1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1,2 எதிரிகள் தரப்பில் சாட்சியின் குறுக்கு விசாரணையை ஒத்தி வைக்க கு.வி.மு.ச பிரிவு 231(2) படி மனு தாக்கல் செய்யப்பட்டு அம்மனு அனுமதிக்கப்பட்டு அ.சா.1 ஐ அரசு தரப்பு சாட்சி சுனிதா என்பவரோடு சேர்ந்து 1, 2 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய ஒத்தி வைக்கப்படுகிறது.